# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SC.No.25/2025**

Prosecution Witness : **LW - 1 / PW - 1**

Name : ஆரோக்கியசாமி Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **05.06.2025**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அணிக்குறிச்சான் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஜெயங்கொண்டம் பணிமனைக்குட்பட்ட பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை சம்பவத்தில் இருந்து தெரியும். நான் TN 45 N.3092 என்ற அரசு பேருந்தில் ஜெயங்கொண்டத்திலிருந்து காட்டுமன்னார் கோவிலுக்கு எடுத்து சென்று கொண்டிருந்தேன். அப்போது நரசிங்கபாளையம் அருகே போய் கொண்டிருந்தபோது, அங்கு அரசமர பேருந்து நிறுத்ததில் நின்று பயணிகள் இறங்குகிறார்களா என்று கேட்டு நடத்துனர் செல்வராஜ் பயணிகள் இறங்குவதாக எனக்கு விசில் மூலம் தகவல் கொடுத்தார். நான் பேருந்தை மெதுவாக அந்த நிறுத்தில் நிறுத்தினேன். பயணிகள் இறங்கினார்கள், பஸ்க்கு 10 மீ முன்பாக தீ எரிவது போன்று தெரிந்தது. பக்கத்தில் ஆஜர் எதிரி ஒரு இருசக்கர வாகனத்தோடு நின்று கொண்டிருந்தார். பேருந்தில் இருந்து பயணிகள் இறங்கிய உடன் நான் பேருந்தை எடுத்து கொண்டு போய்விட்டேன். பேருந்துக்கு எந்த பாதிப்பும் இல்லை. இது சம்மந்தமாக நான் புகார் எதுவும் போலீசில் கொடுக்கவில்லை. போலீசார் தான் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அதில் என்ன எழுதினார்கள்என்று எனக்கு தெரியாது. சாட்சியின் கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு

செய்யப்படுகின்றது. எனக்கு முன்னிலையில் போலீசார் ஏதேனும் பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் அவ்வாறு எதுவும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது, நான் இப்போது சொன்னதை தான் சொன்னேன்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசர் விசாரணையில் கடந்த **29.05.2024** அன்று பேருந்து ஓட்டி சென்ற போது ஆஜர் எதிரி, **7up** பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி தீ வைத்து பேருந்துக்கு முன்பு உருட்டி விட்டார் என்றும், நான் சுதாரித்து பேருந்தை நிறுத்திவிட்டதாகவும், அதனால் பேருந்துக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் போய்விட்டது என்றும், நான் இறங்கி சென்று பார்க்கும்போது, **7up** பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி தீ வைத்தது தெரிய வந்தது என்றும், நான் சுதாரிக்கவில்லை என்றால் அந்த தீ பேருந்தில் பட்டு முழுவதும் தீ பற்றியிருக்கும் என்றும், அது பெட்ரோல் குண்டு என்றும், இது குறித்து மீன்சுருட்டி காவல்நிலையத்தில் ஆஜர் ஆகி புகார் கொடுத்துவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை

மறு விசாரணை–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

Case No: **SC.No.25/2025**

Prosecution Witness : **LW - 2 / PW - 2**

Name : செல்வராஜ் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>05.06.2025</u>**

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் பெரியகிருஷ்ணாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஜெயங்கொண்டம் பணிமனைக்குட்பட்ட பேருந்தில் தற்காலிக நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நான் அரசு பேருந்தில் பணியில் இல்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு 1B டவுன் பஸ் (TN 45 N.3092) அரசு பேருந்தில் ஜெயங்கொண்டத்திலிருந்து காட்டுமன்னார் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தேன். அந்த பேருந்தை ஓட்டுநராக ஆரோக்கியசாமி இருந்தார். அப்போது நரசிங்கபாளையம் அருகே போய் கொண்டிருந்தபோது, அங்கு அரசமர பேருந்து நிறுத்ததில் நின்று பயணிகள் இறங்குகிறார்களா என்று கேட்டு பின் பக்க படிகட்டு அருகில் இருந்தேன். எனவே அப்போது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அந்த இடம் இரவாங்குடி பேருந்து நிலையத்திற்கு அருகே என்பது தான் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தபோதும் இதை தான் சொன்னேன்.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசர் விசாரணையில் கடந்த 29.05.2024 அன்று பேருந்து ஓட்டி சென்ற ஓட்டுநர் ஆரோக்கியசாமி பேருந்தை திடீரென்று நிறுத்தினார், என்ன என்று பார்த்தபோது, பேருந்துக்கு முன்பு 7up பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி தீ வைத்து எதிரி பேருந்துக்கு முன்பு உருட்டி விட்டார் என்றும், ஓட்டுநர் சுதாரித்து பேருந்தை நிறுத்திவிட்டதாகவும், அதனால் பேருந்துக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் போய்விட்டது என்றும், நான் இறங்கி சென்று பார்க்கும்போது, 7up பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி தீ வைத்தது தெரிய வந்தது என்றும், ஓட்டுநர் சுதாரிக்கவில்லை என்றால் அந்த தீ பேருந்தில் பட்டு முழுவதும் தீ பற்றியிருக்கும் என்றும், அது பெட்ரோல் குண்டு என்றும், இது குறித்து மீன்சுருட்டி காவல்நிலையத்தில் ஓட்டுநர் ஆஜர் ஆகி புகார் கொடுத்தார் என்றும், அப்போது நான் உடனிருந்தேன் என்றும், தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை</u>**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.